බෞද්ධ පිළිවෙත් සුරකින දැහැමි සමාජයක්

බෞද්ධ කටයුතු පිළිබඳ දෙපාර්තමේන්තුව

Department of Buddhist Affairs

பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்

# කාර්යසාධන වාර්තාව

## Performance Report - செயற்திட்ட அறிக்கை

## 2015




“දහම්පාය” 135, ශ්‍රීමත් අනගාරික ධර්මපාල මාවත,කොළඹ 07.

“Dahampaya”, 135, Srimath Anagarika Dharmapala Mawatha, Colombo 07.

தஹம்பாய 135. ஸ்ரீமத் அனாகாரிக்க தர்மபால மாவத்தை. கொழும்பு -07

# தொலை நோக்கு

**பௌத்த கலாசார பண்புகளைப் பேணுகின்ற ஒழுக்க மேம்பாடுடையதோர் சமூகம**

# பணிக்கூற்று

**சமபுத்த சாசனத்தின் நிலையுறுதி வளர்ச்சி மற்றும் செயற்பாடுகளை சிறப்பாக ஒழுங்குபடுத்துவதன் மூலமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பௌத்த மக்களிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றை தோற்றுவித்து முன்மாதிரியானதொரு பௌத்த சமூகத்தை தோற்றுவித்தல்.**

# நோக்கம்

- தேரவாத பௌத்த தர்மத்தை பாதுகாத்தல் போஷித்தல் மற்றும் பரப்புதல்
- பௌத்த தர்ம உடமைகளை பாதுகாத்தல் பராமரித்தல் மற்றும் அவற்றை பௌத்த சாசனத்தின் வளர்ச்சிக்கு வேண்டி ஈடுபடுத்தல்
- பௌத்த கலாசாரத்தை போற்றிப் பின்பற்றும் முன்மாதிரியானதொரு சமூகத்தை தோற்றுவித்தல்
- பண்டு தொட்டு பௌத்தசாசனத்துடன் தொடர்புடைய விடயங்களையும் கருத்துகளையும் காலத்தின் தேவைக்கேறப் பயன்படுத்துதல் போஷித்தல் மற்றும் வளர்த்தல்
- பௌத்த இலக்கியம் மற்றும் கலைகளை பாதுகாத்தலும் போஷித்தலும் வளர்த்தலும்
- நவீன தொழிநுட்ப யுகத்திற்கு ஏற்ற வகையில் பௌத்த தர்மத்துடன் இணைந்ததான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் பௌத்த மக்களை ஒழுங்கு செய்து வழிநடாத்துதல்.

# உள்ளடக்கம்

Page No.


தொலை நோக்கு

பணிக் கூற்று

நோக்கம்

பௌத்தமத அலுவல் ஆணையாளர் நாயகத்தின் செய்தி

அறிமுகம்

01) **நிர்வாகப் பிரிவு**

- 01.1 பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கட்டமைப்பு
- 01.2 திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
- 01.3 2015இல் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்

02) **விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவு**


- 02.1 விகாரைகளைப் பதிவு செய்தல்
- 02.2 பஸ்நாயக்க நிலமேக்களை நியமித்தல்
- 02.3 பௌத்த வழிபாட்டுத் தலங்களின் உடமைகளின் பரிபாலனத்திற்கு உதவுதல்.
- 02.4 இரத்தினபுரி மற்றும் கண்டியில் அமைந்துள்ள திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களுடனான தொடர்புகள்
- 02.5 விகாரைகளின் சேமிப்பு நிதியை அபிவிருத்தி பணிகளுக்கு வேண்டி விடுவித்தல்.
- 02.6 உண்டியல்களின் மூலம் கிடைக்கப்பெறும் பணத்தை எண்ணுதலும் மேற்பார்வை செய்தலும்.
- 02.7 விகாரைகளின் காணிப் பிரச்சனைகளை தீர்த்தல்.

03) **அறநெறிப் பாடசாலைகள் பிரிவு**

- 03.1 அறநெறிப் பாடாசலைகளை பதிவு செய்தல்.
- 03.2 அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் விபரங்களை சேகரித்தல் மற்றும் பேணுதல்.
- 03.3 அறநெறிப் பாடசாலைகளுக்கான பரீட்சை நடாத்துதல்.
- 03.4 120ஆவது அறநெறிப்பாடசாலை ஆசிரியர் தினத்தை கொண்டாடுதல்.
- 03.5 ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவு சீருடை மற்றும் மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்குதல்.
- 03.6 அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதற்கான பரீட்சைகளை நடாத்துதல்.
- 03.7 அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை கணிப்பீடுகளை செய்தல்.
- 03.8 அறநெறிப்பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிடுதல்.
- 03.9 புத்த ஜயந்தி நூலகம்

04) **அபிவிருத்திப் பிரிவு**

- 04.1 வசதி குறைந்த விகாரைகளுக்கான நிதியுதவிகளை வழங்குதல்.
- 04.2 பிக்குணிமார்களின் ஆராமைகளை அபிவிருத்தி செய்தல்.
- 04.3 உபசம்பதா சடங்கு விழாக்களுக்கான நிதியுதவிகளை வழங்குதல்.
- 04.4 சிவுபசவுக்கான நிதியுதவிகளை வழங்குதல்.
- 04.5 பௌத்த எழுத்தாளர்களை ஊக்குவித்தல்.
- 04.6 அறநெறிப் பாடசாலைகளின் மேம்பாட்டிற்கு வேண்டிய நிதியுதவிகளை வழங்குதல்.
- 04.7 விகாரைகளின் அபிவிருத்தி குழுக்களை பதிவுசெய்தல்.
- 04.8 சாசனப் பாதுகாப்பு சபைகளின் பணிகளை மேம்படுத்தல்
- 04.9 தேசிய உற்சவங்களை ஒழுங்கு செய்தல்.

05) **கருத்திட்டப் பிரிவு 33-34**

05.1 அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் ஆற்றல்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள்.

05.2 தஹம் சரசவியய பாடத்திட்டம்

05.3 அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான அடையாள அட்டைகளை ஒழுங்கு செய்தல்.

05.4 பௌத்த கலைக்களஞ்சியம்

05.5 திரிபிடங்களை மொழி பெயர்த்தல்.

06) **பிக்குமார்களைப் பதிவு செய்யும் பிரிவு**

06.1 சாமனேர உபசம்பதா சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் பிக்குமார்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்.

07) **தகவல் பிரிவு**

07.1 இலங்கையில் பௌத்த மதம் பற்றிய தகவல்களை சேகரித்தல்.

07.2 தகவல்களை அன்றாடம் பதிவேற்றம் செய்தல்.

07.3 பாளி மேம்பாட்டு பாடத்திட்டம்

07.4 ஊடகச் செயற்பாடுகள் மற்றும் ஏனையவை

08) **கணக்கியல் பிரிவு**

09) **உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

10) **பௌத்த மத அலுவல்கள் தொடர்பான திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள்**

10.1 இரத்தினபுரி பிராந்திய அலுவலகம்

10.2 கண்டி பிராந்திய அலுவலகம்

# பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அவர்களின் செய்தி



இலங்கை ஜனநாயகக் சோசலியக் குடியரசின் அரசியல் யாப்பிற்கு அமைய புத்தசாசனத்தை பாதுகாத்தல் போஷித்தல் மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் எனும் மிகவும் பாரிய பொறுப்பானது புத்தசாசன அமைச்சின் கீழ் செயற்படும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய மேன்மையான பொறுப்பை நிறைவேற்றுவதன் பொருட்டு பௌத்த மத அலுவல்கள் திணைக்களமானது மிகவும் சிறப்புடன் பணியாற்றுவதானது மிகவும் மகிழ்ச்சிக்குரியதொரு விடயமாகும்.

எமது தொலை நோக்காவது பௌத்த பழக்க வழக்கங்களை பேணும் ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதாகும். இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு பல்வேறு பட்ட பணிகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடை முறைப்படுத்தப்படுகின்றன. பௌதீக ரீதியிலான வளர்ச்சியை விடவும் சிந்தனை ரீதியிலான வளர்ச்சியே விசேடமாக தேவைப்படுகின்றது. இத்தகைய சிந்தனை ரீதியிலான வளர்ச்சிக்கு வேண்டி மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதே எமது முக்கிய பணியாகும்.


மக்களின் சிந்தனை ரீதியிலான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு வழிகாட்டுவதில் முக்கிய இடமாக விகாரையானது காணப்படுகின்றது. விகாரைகளையும் அறநெறிப் பாடசாலைகளையும் பௌதீக ரீதியில் மேம்படுத்துவதுடன் மக்களுக்கும் விகாரைகளுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்துவதன் பொருட்டு செயற்படுவது முக்கியமானதொரு பணியாகும்.
இவ்வருடத்தனுள் பஞ்சீலக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பழக்க வழக்கங்களை பேணும் சமூகமொன்றை கட்டியொழுப்புவதன் பொருட்டு திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதையிட்டு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். இதற்கான ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து பிரிவுகளினதும் நிர்வாக அதிகாரிகள் உள்ளடலங்கலான ஏனைய அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்திரபிரேம கமகே
பௌத்த மத ஆணையாளர் நாயகம

# அறிமுகம்

பௌத்த மத அலுவல்கள் திணைக்களமானது பிரதானமாக சம்புத்த சாசனத்தின் நிலையிறுதியின் பொருட்டும் சமயப் பண்புகளைப் பேணும் பௌத்த சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு காலத்தின் தேவைக்கேற்ப கருத்திட்டங்கள் பலவற்றை செயற்படுத்துவதுடன் 1931 இல் 19 ஆம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்களுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களான பௌத்த வழிபாட்டுத் தலங்களையும் உடமைகளையும் சம்புத்தசாசனத்தின் நிலையுறுதிக்கு வேண்டி ஈடுபடுத்துவதற்கு தேவையான நிர்வாக ரீதியிலான ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுத்தல் விகாரைகளை அபிவிருத்தி செய்தல் அறநெறிப் பாடசாலைகளில் கல்வித்தரத்தை மேம்படுத்தல் மற்றும் நாட்டின் அனைத்து சாமனேர உபசம்பதா பிக்குமார்களைப் பதிவு செய்து தகவல்களைப் பாதுகாத்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை நிறைவேற்றுவதன் பொருட்டு பௌத்தமத அலுவல்கள் திணைக்களத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் காணப்படுவதுடன் அவற்றுக்கான பொறுப்புக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.




விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்திற்கமைய தூர இடங்களில் வாசம் செய்யும் பிக்குமார்களுக்கு தமது தேவைகளை இலகுவாக பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு கண்டியிலும் இரத்தினபுரியிலும் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.

சம்புத்த சாசனத்தின் நிலையிறுதி மேன்மை மற்றும் மேம்பாடு போன்றவற்றிற்காக கீழே காட்டப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

01) சாசனப் பாதுகாப்பு சபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

02) அறநெறிப் பாடசாலைகளின் பணிகள்

i. அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிட்டு விநியோகித்தல்



ii. அகில இலங்கை ரீதியில் அறநெறிப் பாடசாலைகளுக்கான பரீட்சைகளை நடாத்துதல்.
iii. அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை கணிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச மட்டம் மாவட்ட மட்டம் மற்றும் அகில இலங்கை ரீதியில் நடாத்துதல்
iv. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதன் பொருட்டு அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவற்கான பரீட்சைகளை நடாத்துதல்.
v. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகளை வழங்குதல்.
vi. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவுகளை வழங்குதல்.
vii. அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்.
viii. அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கான பயிற்சிகளை வழங்குதல்.
ix. அறநெறிப் பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான நிதியுதவிகளை வழங்குதல்.
x. வுசதி குறைந்த அறநெறிப் பாடசாலைகளுக்கான நிதியுதவிகளை வழங்குதல்.
xi. நீண்ட காலமாக தொடர்ந்து அறநெறிப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் சேவையை பாராட்டி சான்றிதழ்களை வழங்குதல்.
xii. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் மொழி அறிவை மேம்படுத்துவதன் பொருட்டு பாளி மொழி மேம்பாட்டு வகுப்புக்களை நடாத்துவதுடன் பரீட்சைகளையும் நடாத்துதல்.
xiii. கல்வித்தகைமை குறைந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் கல்வித்தகைமைகளை மேம்படுத்தும் பொருட்டு ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்துடனும் பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்துடன் இணைந்து தஹம் சரசவிய நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல்.

03) நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதன் பொருட்டு தொடர்புகளை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்பான நிர்வாகப்பணிகள் அலுவலகப்பணிகள் கட்டிட பரிபாலனம் தபால் சேவைகள் மற்றும் வாகனங்கள் தொடர்பான பணிகளை நிறைவேற்றுதல்.

04) நிறுவனத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்தி வரவு செலவுத்திட்டத்தினூடாக வழங்கப்படும் நிதியை உரிய பணிகளின் பொருட்டு செலவு செய்வது அது தொடர்பான செலவு விபரங்களை சமர்பித்தல் சம்பளக் கொடுப்பனவு போன்ற நிதிக் கணக்குகளை மேற்கொள்ளுதல்.

05) விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்திற்கமைய பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கீழ் இயங்கும் பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கான பஸ்நாயக்க நிலமேக்கள் ∴ பொறுப்பாளர்களை நியமித்தல் மற்றும் அவர்களின் பரிபாலனத்தை மேற்பார்வை செய்தல்.

06) பௌத்தசமய வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் பரிபாலனத்திற்கு தேவையான உதவிகளை வழஙகுதல்.இதன் போது இவ் வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளை நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதன் மூலமாக வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான அனுமதியை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அசையா சொத்துக்களை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல்இ வழிபாட்டுத் தலங்களின் சொத்துக்கள் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

07) நாட்டிலுள்ள அனைத்து விகாரைகளையும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்தல் மற்றும் விகாரைகளின் தலைமைப் பிக்குமார்களின் பதவிகளை ஏற்றுக் கொள்ளல்.



08) விகாரைகளுக்கான நிதியுதவிஇ சிவுபசவுக்கான நிதியுதவி வசதி குறைந்த விகாரைகளுக்கான நிதியுதவிகளை வழங்குதல்.

09) பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளை நிறுவுவது தொடர்பான பணிகள்.

10) பிக்குமார்களின் ஈமைச் சடங்குகளுக்கு தேவையான நிதியுதவிகளை வழங்குதல்.

11) சுகந்திர தினம்இ வெசாக் மற்றும் பொசொன் உற்சவங்களை கொண்டாடுவதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுதல்.

12) விகாரைகளின் செயற்குழு சங்கங்களைப் பதிவு செய்தல்.

13) விகாரைகளுக்கு சலுகை அடிப்படையில் தொலைபேசி வசதிஇ நீர் விநியோகம்இ மின்சார வசதி போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான சிபாரிசினை வழங்குதல்.

14) நிக்காயகள் மற்றும் நிக்காய பிரிவுகள் தொடர்பான பணிகள்.

15) பிள்ளைகளை துறவறத்தில் இணைத்துக் கொள்வதும் உபசம்பதா சடங்குகளை நடாத்துவதும்.

16) நிக்காயத் தலைமையகங்கள் தொடர்பான கொடுப்பனவுகள். (சாரதிஇ தொழிலாளர்கள்)

17) பௌத்த எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்தல்.

18) பிக்குணிமார்கள் தொடர்பான பணிகள்


i. ஆராமைகளைப் பதிவு செய்தல்.
ii. அடைளாள அட்டைகளை வழங்குதல்
iii. கல்வி நிலையங்கள் தொடர்பான பணிகள்
iv. கூட்டங்கள் தொடர்பான பணிகள் மற்றும் சங்கமித்தா ஞாபகர்த்த விழா

19) பிக்குமார்களின் சாமனேர மற்றும் உபசம்பதா பதிவுகள்.

20) பௌத்த பிக்குமார்களின் அடையாள அட்டைகளை ஒழுங்கு செய்தல்.

21) விகாரைகளுக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகளில் உள்ள பணம் தொடர்பான பணிகள்

மேலே குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக வருடாந்தம் நடாத்தப்படும் தேசிய சுகந்திரதின விழாஇ அரச வெசாக் உற்சவம்இ வருடாந்தம் இடம்பெறும் மாணவர்களுக்கான பிரதேசஇ மாவட்டஇ அகில இலங்கை ரீதியிலான ஆற்றல் கணிப்பீடு போட்டிகள் சங்கமித்தா பெரஹரா மற்றும் சங்கமித்தா ஞாபகர்த்த விழா போன்றவற்றை பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்ற விசேட நிகழ்ச்சித் திட்டங்களாக குறிப்பிட முடியும்.




# 01
# நிர்வாகப்பிரிவு

திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவினால் மிகப் பாரிய அளவிலான செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதுடன் அவற்றில் சில பிரதான பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- திணைக்களத்தில் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளினதும் தனிப்பட்ட கோவைகளை பராமரித்தலும் அவை தொடர்பான பணிகள்
- பணியாற்றும் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை வழங்குதல்
- வாகனங்களைப் பராமரித்தல் மற்றும் அவை தொடர்பான அனைத்து விடயங்களும்.
- நீர் மின்சாரம் தொலைபேசி கட்டணங்களை செலுத்துதல் தொடர்பான அனைத்து பணிகளையும் மேற்கொள்ளுதல்.
- தபால் விடயங்கள் தொடர்பான பணிகள்
- திணைக்களத்தின் அதிகாரிகள் தொடர்பான அனைத்து நிர்வாகப் பணிகளும்
- பதவிகளை அனுமதித்தல் இணைத்துக் கொள்ளல் விதிமுறைகளை தயாரித்தல் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை பூர்த்தி செய்தல் பராளுமன்ற அறிக்கைளை தயார் செய்தல் அமைச்சரவை பத்திரங்களை தயாரித்தல் போன்ற நிர்வாகப் பணிகள்
- உத்தியோகத்தர்களின் வரவுஇ விடுமுறை தொடர்பான பணிகள்
- உத்தியோகத்தர்களின் ஒழுக்கம் சம்பந்தமான பணிகள்
- அதிகாரிகள் வங்கிக் கடன்களை பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை வழங்குதல்.
- உத்தியோகத்தர்களின் இடமாற்றம் அவற்றை நிரப்புதல் போன்ற பணிகள்
- மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு போக்குவரத்து செலவுகளுக்கான கொடுப்பனவு போன்றவற்றுக்கான வவுச்சர்களை பெற்றுக் கொள்வதும் அனுமதிகளை வழங்குவதும்.
- உத்தியோகத்தர்களுக்கான காப்புறுதி தொடர்பான பணிகள் (அக்ரகார)
- நிர்வாகம் தொடர்பான பணிகளின் போது வேறு நிறுவனங்களுடன் இணைத்து பணியாற்றுதல்.
- தொலைபேசிஇ கணனிஇ தொலைநகல் இயந்திரம் போன்றவற்றை பராமரித்தல்.
- கட்டிடங்களை பராமரித்தல் மற்றும் புனரமைத்தல் (மகாநாயக்க சாரிக்காராமைஇ கண்டி பிராந்திய அலுவலகம்இ இரத்தினபுரி பிராந்திய அலுவலகம்)
- பிரதான உத்தயோகத்தர்கள்இ பிரிவுப் பிரதான அதிகாரிகளுக்கான கூட்டங்களை நடாத்துதல்.
- மாவட்ட ரீதியில் கலாசார உத்திரோயகத்தர்களுக்கான கூட்டங்களை நடாத்துவது மற்றும் அது தொடர்பான பணிகள்
- பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபங்கள் மற்றும் ஏனைய அனைத்து சுற்று நிருபங்களை பின்பற்றுவதும் அவை தொடர்பான பணிகளை மேற்கொள்வதும்.



## 01.1. பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கட்டமைப்பு



## 01.2. திணைக்களத்தில் சேவைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினதும் சேவை புரியும் உத்தியோகத்தர்களினதும் எண்ணிக்கை

| பதவி | உரிய சேவை | தரம் | ஒப்புதல் | சேவை | காலியாக |
|---|---|---|---|---|---|
| பௌத்தமத ஆணையாளர் நாயகம் | இலங்கை நிர்வாக சேவை | 1 விசேட தரம் | 1 | 1 | - |
| பௌத்தமத ஆணையாளர் (அறநெறிப் பாடசாலைகள்) | இலங்கை நிர்வாக சேவை | 1 | 1 | 1 | - |
| பௌத்தமத ஆணையாளர் (கண்டி) | இலங்கை நிர்வாக சேவை | 1 | 1 | 1 | - |
| பிரதான கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை | 1 | 1 | 1 | - |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | இலங்கை நிர்வாக சேவை | 1 | 1 | 1 | - |
| பிரதி உதவி ஆணையாளர் | இலங்கை நிர்வாக சேவை | 11/111 | 4 | 4 | - |
| கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை | 11/111 | 1 | 1 | - |
| சட்ட ஆலோசகர் | திணைக்களம் | | 1 | 1 | - |
| துணை எழுத்தார்(பௌத்த கலைக்களஞ்சியம்) | திணைக்களம் | | 1 | 1 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | சிரேஷ்ட தரம் | 1 | 0 | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | 1/11/111 | 45 | 25 | 20 |
| அபவிருத்தி உத்தியோகத்தர் | திணைக்களம் | | 5 | 4 | 1 |
| பௌத்த மத கலாசார அலுவலர்கள் | திணைக்களம் | | 481 | 465 | 16 |
| கணக்கியல் உதவியாளர் | திணைக்களம் | | 2 | 2 | - |
| அபிவிருத்தி உதவியாளர் | திணைக்களம் | | 39 | 38 | 1 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | அபிவிருத்தி உதவியாளர் | | 204 | 151 | 53 |
| உதவி சட்ட ஆலோசகர் | திணைக்களம் | | 2 | 1 | 1 |
| விடுதிப் பொறுப்பாளர் | திணைக்களம் | | 1 | 1 | - |
| சாரதி | சாரதி சேவை | 1/11/111 | 12 | 11 | - |
| அலுவலக உதவியாளர் | அபிவிருத்தி உதவியாளர் சேவை | 1/11/111 | 20 | 19 | 1 |
| லொறி உதவியாளர் | திணைக்களம் | | 2 | 0 | 2 |
| விடுதி உதவிப்பொறுப்பாளர் | திணைக்களம் | | 1 | 1 | - |

## 01.3. 2015 இல் நிர்வாகப் பிரிவினால் மேற் கொள்ளப்பட்ட விசேட பணிகள

1. பௌத்த மத கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வேண்டி 2016 ஆண்டிற்கான இடமாற்றங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான பணிகளை மேற்கொண்டமை.

2. பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் ஊடாக நியமனங்களைப் பெற்றக் கொண்ட 75அபிவிருத்தி உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு தேவையான பணிகளை மேற்கொண்டமை.

3. பௌத்த மத கலாசார உத்தியோகத்தர்களுக்கு தேவையான அலுவலப் பொதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

4. திணைக்களத்தின் உள்ளக தொலைபேசி இணைப்புக்களை சீர் செய்தமை மற்றும் சட்ட ஆலோசகரினதும் கணக்காளரினதும் அலுவலகங்களுக்கு புதிய தொலைபேசி இணைப்புக்களை வழங்கியமை.

5. இத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பௌத்த கலைக் களஞ்சியத்தின் தொகுப்பு பணிகளின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் 03 எழுத்தாளர்களை இணைத்துக் கொள்வதன் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ள முடிந்தது. இது தொடர்பான மேலதிக பணிகள் புத்தசாசன அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

6. திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களை பரிபாலித்தலஇ அவற்றை புனரமைப்புச் செய்தல் மற்றும் போக்குவரத்து தொடர்பான பணிகளை முன்னெடுத்தல்.

2015.12.31 இற்கு திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள

- வான்கள் - 04
- லொறிகள் - 03
- கார்கள் - 03
- கெப் வண்டிகள் - 02

7. பௌத்த கலைக் களஞ்சியத்தில் துணை எழுத்தாளர் பதவிக்கான பதவி உயர்வை வழங்குவதற்கான பணிகளை நிர்வாக கோவைக்கு அமைய மேற்கொள்ளுதல்.

8. திணைக்களத்தின் தகவல் தொடர்பாடல் நிலமையை மேம்படுத்துவதன் பொருட்டு சலுகை விலையின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு மடிக்கணனிகளை



வழங்குவதன் பொருட்டு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்பிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

9. திணைக்களத்தின் 98 உத்தியோகத்தர்களுக்கு காப்புறுதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

10. திணைக்களத்தின் 56 உத்தியோகத்தர்களுக்கான அலுவலக அடையாள அட்டைகளை வழங்கியமை.

11. மகாநாயக்க சாரிக்காராமை மற்றும் தஹம்பாய கட்டிடத்திற்கு பின்புறமாகவுள்ள கட்டிடத்தை புனரமைப்பு செய்தமை.

12. திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கான வதிவிடப் பயிற்சிகளை நடாத்தியமை.

| இடம் பெற்ற திகதி | இடம்பெற்றஇடம் | பயிற்சியில் உள்ளடக்கப்படும் பிரதான விடயங்கள் |
|---|---|---|
| 2015.02.27 - 28 | ஸ்ரீலங்கா யூத் பாம் பயிற்சி மத்திய நிலையம்- படங்கலை | ❖ விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான சட்டமூலம் பற்றிய விளக்கம்<br>❖ காலம் முகாமைத்துவம் மற்றும் அலுவலக உபயோகத்தின் பொருட்டு தகவல் தொழிநுட்பத்தை உபயோகித்தல்.<br>❖ அலுவலக முறைமை மற்றும் கணக்கியல் முறைமைகள் |
| 2015.03.13 - 14 | ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் | |
| 2015.06.26 - 27 | வலங்கு பயிற்சிக் கேந்திரம்- கிரித்தலை | |
| 2015.07.17 - 18 | விகாரமகாதேவி மனிதவள அபிவிருத்தி கேந்திரம் - மிரிஜ்ஜவிலை | |
| 2015.10.16 - 17 | ஸ்ரீலங்கா யூத்பாம் பயிற்சி மத்திய நிலையம்-படங்கலை | |

13. 2015 ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தலுடன் தொடர்புடைய பணிகள்

14. திணைக்களத்தில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு தேவையான பணிகளை மேற் கொண்டமை.

# 02

# விகாரைகள் அறக்கட்டளை நிலயங்கள் பிரிவு

1931 இன் 19 ஆம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான சட்டத்திற்கமைய பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் பணியானது இப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புத்தசாசனத்தின் வளர்ச்சியும் நிலையுறுதியும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 02.1. விகாரைகளைப் பதிவு செய்தல்

நாட்டிலுள்ள அனைத்து விகாரைகளையும் பௌத்த மத அலவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் விகாராபதி பதவிகளை ஏற்றுக் கொள்ளல் போன்ற பணிகள் விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவினால் மேற்பொள்ளப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு வரை பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை 11345. காணப்படுவதுடன் அவற்றில் பதிவு செய்யப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை 8233 ஆகும்.

விகாரைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதன் மூலமாக அவை சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்படுவது மட்டுமன்றி அபிவிருத்திப் பணிகளுக்கும் உதவியாக அமைகின்றது.

## 02.2. பஸ்நாயக்க நிலமேக்களை தெரிவு செய்தல்

விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) உப அத்தியாயத்திற்கமைய பௌத்த மத அலுவல்கள் ஆணையாளரின் கீழ் செயற்படும் வழிபாட்டுத் தலங்களில் பஸ்நாயக்க நிலமேக்கள் ∴ பொறுப்பாளர்களை நியமித்தல் மற்றும் அவர்களின் பரிபாலனத்தை மேற்பார்வை செய்தல் போன்ற பணிகள் விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் சட்டமூலத்தின் 4(1) உப அத்தியாயத்திற்கமைய 2015 இல் அறக்கட்டளை நிலையங்களுக்கென தேர்தல் மூலம் 19 பஸ்நாயக்க நிலமேக்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதற்கு மேலதிகமாக ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமேயைத் தெரிவு செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.




விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் சட்ட மூலத்தினூடாக பஸ்நாயக்க நிலமேக்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும் வழி நடாத்துவதற்கும் பௌத்த மத ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டதன் மூலமாக மேற்கூறபட்ட பணிகளை சிறப்பாக மேற்கொள்ள முடிகின்றது.

## 02.3. பௌத்த மதவழிபாட்டு தலங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை நிர்வகிப்பதற்க்கு உதவுதல

இதன் போது வழிபாட்டத் தலத்திற்கு சொந்தமான காணிகளை நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல். இவ் வழிபாட்டுத் தலங்களுக்கு தேவையான விதத்தில் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை வழங்குதல் சாசனத்திற்கு சொந்தமான சொத்துக்களை பேணுதல் உத்தேச மற்றும் அரையாண்டு வருமான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் வருமானத்தைப் பரிசீலித்தல் போன்றன இடம் பெறுகின்றன. 2015 இல் இத்தகைய செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது.

2015 இல் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியுடன் வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான 171 காணிகள் இவ்வாறு குத்தகைக்கு வழங்கப்பட்டன.

.

## 02.4. இரத்தினபுரி மற்றும் கண்டி பிராந்திய அலுவலகங்களுடனான தொடர்புகள்.

இரத்தினபுரி மற்றும் கண்டி பிராந்திய அலுவலகங்களுக்குரிய மாவட்டங்களில் அமைந்துள்ள விகாரைகளை பதிவு செய்யும் பணிகள் மட்டுமே பிரதான திணைக்களத்தில் மேற் கொள்ளப்படுகின்றது. விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் சட்ட மூலத்தினுடாக வழங்கப்பட்டுள்ள ஏனைய அனைத்துப் பணிகளும் பிராந்நிய அலுவலகங்களினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இதன் இம் மாவட்டங்களிலுள்ள பிக்குமார்கள் மற்றும் பஸ்நாயக்க நிலமேக்களுக்கு மேற்கூறப்பட்ட தமது பணிகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளமுடியும்.

நுவரெலியாஇ கண்டிஇ மாத்தளை போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த பௌத்த வழிபாட்டுத் தலங்கள் கண்டி பிராந்திய அலுவலகத்தினூடாகவும் இரத்தினபுரிஇ மொனராகலைஇ பதுளை போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் ஏனைய விடயங்கள் மேற்கூறப்பட்ட பிராந்திய அலுவலகங்களினூடாகவே மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய மாவட்டங்களில் பொருட்டு மேற்கூறப்பட்ட விடயங்கள் பிரதான திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு காணிகளை குத்தகைக்கு வழங்குவதனால் கிடைக்கப் பெறும் வருமானமானது பிக்குமார்களின் சமய மற்றும் கல்வித் தேவைகளின் பொருட்டு பயன் படுத்தப்படுகின்றது.



## 02.5. விகாரைகளின் சேமிப்பு கணக்குகளில் உள்ள நிதியை அவற்றின் அபிவிருத்தி பணிகளின் பொருட்டு விடுவித்தல்.

இதன் போது பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பெயரில் சேமிக்கப்பட்டுள்ள விகாரைகளுக்குச் சொந்தமான நிதியை பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழான அனுமதியுடன் விகாரைகளின் அபிவிருத்திப் பணிகளின் பொருட்டு விடுவிக்கும் செயலானது இடம் பெறுகின்றது.

இவ்வாறு 2015 இல் 101விகாரைகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டதுடன் இவ்வாறு வழங்கப்பட்ட நிதியானது எவ்வாறு அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டது என்பது பற்றிய அறிக்கைளை பிரதேச செயலாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2015இல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விகாரைகளின் எண்ணிக்கை 8233 ஆக உயர்வடைந்துள்ளது. இதன் பிரதான நோக்கம் விகாரைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கென அரசினால் வழங்கப்படும் நிதியுதவிகளை மிக இலகுவாக பெற்றுக் கொள்வதாகும்.

விகாரைகளுக்கு சொந்தமான காணிகளில் சட்ட விரோதமாக குடியிருப்பவர்களுக்கு பிரதேச செயலாளர்கள் ஊடாக தெரியப்படுத்தி அக் காணிகளில் இருந்து கிடைக்கப் பெற்ற வருமானத்தை விகாரைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எமது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 02.6. உண்டியல்களின் மூலமாக கிடைக்கப் பெறும் காணிக்கைளை எண்ணும் பணியின் போது மேற்பார்வை செய்தல்

விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் சட்ட மூலத்தின் 4(1) அத்தியாயத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் பரிபாலிக்கப்படும் தெவுந்தரை விஷ்ணு தேவஸ்தானம் மற்றும் தெவுந்தரை ரஜமகா விகாரை சீனிகம தேவஸ்தானம் களனி ரஜமஹா விகாரை ஜயசேகராராமை போன்ற வழிபாட்டுத் தலங்களில் உண்டியல்கள் மூலம் கிடைக்கப் பெறும் வருமானத்தை எண்ணும் பணியானது திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழே இடம்பெறுகிறது. இதன் போது திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து இரு அதிகாரிகளும் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பௌத்த மத கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். உண்டியலகள் மூலமான வருமானமானது எண்ணப்படும் போது மேற்பார்வை செய்வதன் மூலமாக முறைகேடுகள் ஏதும் இடம்பெறாமல் அவற்றை உரிய முறையில் வங்கிக் கணக்குகளில் வைப்பு செய்வதற்கு வசதியாக அமைகின்றது.




மேலும் கண்டி மற்றும் இரத்தினபுரி ஆகிய பிராந்திய அலுவலகங்களுக்குரிய மாவட்டங்களில் அமைந்துள்ள வழிபாட்டுத்

தலங்களின் உண்டியல்கள் எண்ணும் பணியானது மேற்கூறப்பட்ட வகையிலேயே உரிய பிரதேச செயலகங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன..

## 02.7. விகாரைகளுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்த்தல்.

விகாரைகளில் விகாராதிபதி பதவிகள் தொடர்பாக காணப்படும் பிரச்சனைகளைப் போன்றே அவற்றின் காணிகள் தொடர்பான பிரச்சனைகள் பற்றியும் பிரதேச செயலாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டு அவர்கள் வழங்கும் அறிக்கைகளின் அடிப்படையில் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது அத் திணைக்களத்தின் கீழ் இயங்கிவரும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டு சிபாரிசுகளும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

2015 இவ்வாறான 38 பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதுடன் சில பிரச்சனைகளை சட்ட சிக்கல்கள் காரணமாக எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# 03
# அறநெறிப் பாடசாலைகள் பிரிவு


## 03.1. அறநெறிப் பாடாசலைகளைப் பதிவு செய்தல்

மாணவர்களின் ஒழுக்க மேம்பாட்டினை விருத்தி செய்வதற்கு அறநெறிப் பாடசாலைகள் மிகவும் உறுதுணையாக அமைகின்றன. இந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும் அனைத்து அறநெறிப் பாடசாலைகளும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. பதிவின் பின்னர் அறநெறிப் பாடசாலைகள் தொடர்ந்தும் இயங்குவதற்கு தேவையான நூல்கள் வரவு இடாப்புக்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு வருடாந்தம் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

.

| பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை | தகவல் வழங்கப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **10,720** | 9,857 | 126,039 | 2,113,454 |


அட்டவணை 03.1 –அறநெறிப் பாடசாலைகள் பதிவு தொடர்பான பணிகள்




வரைபு 03.1 இலங்கையில் பௌத்த அறநெறிப் பாடசாலைகளை பதிவு செய்தலின் வளர்ச்சி வீதம்

## 03.2. அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மாணவர்களின் தகவல்களைச் சேகரித்தலும் பேணுதலும்


இதன் மூலம் நாடு முழுவதிலும் உள்ள பௌத்த அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய பதிவேடுகளை பேணும் நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் போன்றோரின் தகவல்களைப் பெற்றுக் கொண்டு எதிர்கால செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுகின்றது.





வரைபு 03.2- இலங்கையில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை வளர்ச்சி வீதம்

வருடந்தோறும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவு மற்றும் சீருடைகளை வழங்குவதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நூல்களை வழங்குவதற்கும் மாணவர்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் ஏனைய தேவைகளின் பொருட்டு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குமான நோக்கத்துடன் இப் பதிவேடானது பேணப்படுகின்றது.

- ❖ 2015 இல் 21 மாவட்டங்களில் 10,720 அறநெறிப்பாடசாலையில் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2,113,454 ஆகும்




வரைபு 03.3 இலங்கையில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை வளர்ச்சி வீதம்




வரைபு 03.4 - 2015 அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை

## 03.3. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சைகளை நடாத்ததல



அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் சமய அறிவை பரீட்சிக்கும் பொருட்டு இது நடாத்தப் படுகின்றது. 2015 இல் 3914 பரீட்சை நிலையங்களில் 953416 விண்ணப்பதாரிகளுக்கு வேண்டி நடாத்தப்பட்ட பரீட்சைக்கான உத்தேச செலவு மதிப்பீடு ரூ.21000000 ஆக கணக்கிடப் பட்ட போதும் ரூ17510072 செலவு செய்யப் பட்டது.


## 03.4. 120 ஆவது அறநெறிப் பாடசாலைகள் தினக் கொண்டாட்டம

அகில இலங்கை பௌத்த அறநெறிப் பாடசாலைகள் தினமானது இலங்கையின் முதலாவது அறநெறிப் பாடசாலையான காலி வெலிவத்தை விஜயானந்த அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட 1895 ஆகஸ்ட் 03 ஐ ஞாபகப்படுத்தும் வகையில் வருடந்தோறும் ஆகஸ்ட் 03 ஆம் திகதி கொண்டாடப் படுகின்றது. 2015 இல் இதன் 120 தினக் கொண்டாட்ட நிகழ்வானது ஆகஸ்ட் 3 ஆம் திகதி பண்டராவளை நகரசபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன் போது சிசு சவிய புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ் அறநெறிப் பாடசாலை பரீட்சையில் தரம் 10 இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு மாதாந்தம் ரூ.500 வீதம் இரண்டு வருடங்களுக்கு அவர்களுக்கு க.பொ.த (சாதாரண தரம்) வரை புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. இப் புலமைப் பரிசிலானது அகில இலங்கை சாசனப்பாதுகாப்புச் சபை நிதியத்திலிருந்து வழங்கப்படுகின்றது.

அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 30 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு சமாதான நீதவான் பதவிகளை வழங்குதல் மற்றும் 50 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றுவர்களுக்கு மாதாந்தம் ரூ1000 வீதம் வைத்தியச் செலவுக்கான நிதியை வழங்கும் நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன. மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கென ரூ.580000.00 செலவிடப்பட்டது.

## 03.5. ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவு சீருடைக் கொடுப்பனவு மற்றும் மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்குதல்.




வரைபு -03.5 – அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை

2015 இல் இக் கொடுப்பனவானது 317 பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளைச் சேர்ந்த 9857 அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்கப் பட்டது.

இக் கொடுப்பனவினை பெறுவதற்கு பெறுவதற்கான தகுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 93473 ஆகும். ஒரு

ஆசிரியருக்கு வருடத்திற்கு ரூ 2000 கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது. இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி ரூ.170000000 ஆகக் காணப்பட்டதுடன் ரூ.152624.985 நிதியானது செலவு செய்யப்பட்டது. 2015 இல் அனைத்து ஆசிரியர்களுக்கும் மாதத்திற்கு ரூ.200 வீதம் 9857 அறநெறிப் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டது.

மேல் மகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு ரூ 200 வீதம் மொத்தமாக 06 மாதங்களுக்கும் ஏனைய மாகாணங்களைச் சேர்ந்நதவர்களுக்கு (யாழ்ப்பாணம் கிளிநொச்சி மன்னார்) மாவட்டங்களைத் தவிர்த்து மொத்தமாக 07 மாதங்களுக்குமென ரூ.126039 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.




03.1 அட்டவணை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை வழங்கும் நடைமுறை.

தமது சுயவிருப்பத்தின் பேரில் எந்தவொரு பலனையும் எதிர்பாராமல் பௌத்த அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முகமாக 2004 தொடக்கம் தொடர்ச்சியாக ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்த 18 வயது நிரம்பிய ஆசிரியர்களுக்கு திணைக்களத்தினால் சீருடை ஒன்று வழங்கப்படுகிறது.

சீருடைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்கள். ஆசிரியர்களுக்கான சீருடைகள் வழங்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் வளர்ச்சி காணப்படுகின்றது. அத்துடன் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகின்றது. எனவே ஆசிரியர்களுக்கு சீருடைகளை வழங்குவதன் மூலமாக ஒழுக்க மேம்பாடுடைய சமூகம் ஒன்றை தோற்றுவிப்பதற்கான செயற்பாடானது மிகவும் இலகுவாகப்படுகின்றது. இதற்கென அரசாங்கம் வருடம் தோறும் நூறு மில்லியன் ரூபாய்க்கு மேலதிகமான நிதியை செலவிடுகின்றது. அதெற்கென இம்முறையும் ரூபா.150 மில்லியன்கள் வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது.

<u>சீருடைகளை வழங்கும் முறைகள் பற்றிய விபரம்.</u>

- பெண்களுக்கான சீருடை ஒன்றுக்கு ஸ்ரீ ரூ.1400.00
- ஆண்களுக்கான சீருடை ஒன்றுக்கு ஸ்ரீ ரூ. 940.00
- பிரதேச சாசன பாதுகாப்புச் சபைகளுக்கு சீருடைகளை விநியோகிப்பதற்கான மொத்த செலவு ஸ்ரீ ரூ.1,000,000.00


## 03.6. அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை

இப்பரீட்சையை நடாத்துவதன் மூலமாக கீழே குறிக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. தற்போது சேவையாற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் கல்வித் தகைமையை மேம்படுத்தல்.
2. ஆறநெறிப் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் சேவையை பாராட்டுதல்.
3. ஆசிரியர்களின் அறிவுத்திறனை மேலும் விருத்தி செய்வதுடன் உயர்கல்வியை தொடரச் செய்தல்.
4. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சமூகத்தில் கௌரவத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு மக்களிடையே நன்மதிப்பை ஏற்படுத்தல்.

2015இல் 20 மாவட்டங்களைச் சேர்ந்த பரீட்சாத்திகளுக்கென 21 பரீட்சை மத்திய நிலையங்களில் இப்பரீட்சை நடாத்தப்பட்டது. பரீட்சைக்கென 8,659 பேர் விண்ணப்பித்திருந்ததுடன் அதில் 7,676 பேர் தேவையான தகைமைகளைக் கொண்டிருந்தனர். இதில் பரீட்சைக்கு






வரைபு 03.6 - அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் பரீட்சை முடிவுகள்.

தோற்றியவர்கள் 5,433 பேர்களாவர். பரீட்சைக்கு தோற்றாதவர்களின் எண்ணிக்கை 2,243 பேர் ஆவதுடன் இது தகுதி பெற்றவர்களின் 29.20மூ ஆவர்.

2015 மே மாதம் நடாத்தப்பட்ட இப்பரீட்சைக்கென ரூ.1,035,536.00 நிதி செலவு செய்யப்பட்டதுடன் 2015 ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.

## 03.7. அறநெறிப்பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை கணிப்பிட செய்தல்.

அறநெறிப்பாடசாலை மாணவ மாணவியரின் அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டும் புத்த தர்மத்தை போதிப்பதன் பயனைப் பெற்றுக் கொள்வதற்கும், நற்பண்புகள் நிறைந்த மாணவ சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்கத்துடனும் வருடம் தோறும் நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆற்றல் கணிப்பீட்டு நிகழ்வானது இவ் வருடமும் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

மாணவர்களுக்கான இவ்வாற்றல் கணிப்பீட்டு நிகழ்வானது அறநெறிப் பாடசாலை மட்டம், பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் அகில இலங்கை ரீதியாக நான்கு கட்டங்களாக நடாத்தப்படுகின்றது.

இதில் 2015 புதியதொரு போட்டியாக "பெற்றோரைப் போற்றும்" பாடல் போட்டியொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் யோசனைக்கமைய ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டியானது இந்நிகழ்வில் மிகவும் வெற்றிகரமான போட்டியாக விளங்கியதுடன் அனைவரதும் விருப்பத்திற்குரிய போட்டியாகவும் பாராட்டப்பட்டது. இம்முறை இந்நிகழ்வானது அம்பாறை டீ.எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலையில் இடம்பெற்றதுடன், இதில் பிரதம அதிதியாக மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச மட்டத்திலான ஒழுங்கு செய்தல் பணிகளுக்கென பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயலாளர் தேரருக்கு ரூ.10,000.00

வீதமும் மாவட்ட மட்டத்திலான ஒழுங்கமைப்புகளுக்கு மாவட்ட சாசனப் பாதுகாப்புச் சபை செயலாளர் தேரருக்கு ரூ.18,000 வீதமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கான உத்தேச செலவு மதிப்பீடு ரூ.16,536,000 ஆக இருந்ததுடன் மொத்தமாக ரூ.16,252,785 நிதியானது 2015இல் செலவு செய்யப்பட்டது.

## 03.8. அறநெறிப்பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிடுதல்.

ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை மேம்படுத்தும் நோக்கத்துடன் அறநெறிப்பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிட்டு விநியோகிக்கும் செயற்பாடானது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வருடத்திற்கு தேவையான நூல்களை பற்றிய விபரத்தை அறநெறிப்பாடசாலைகளிடம் இருந்து பெற்றுக் கொண்டதன் பின்னரே அச்சுப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. நூல்களானது அரச அச்சகத்திலும், அரசாங்க கூட்டுத்தாபனத்திலும் மற்றும் பிரிண்டஸ் எக்ஸலட் நிறுவனத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கென ரூ.80,000,000.00 நிதி ஒதுக்கப்பட்டதுடன் இதன் போது மொத்தமாக ரூ.79,799,619 நிதியானது செலவு செய்யப்பட்டது.

இந்த நூல்களை அச்சிட்டு திணைக்களத்தின் களஞ்சியத்தில் ஒப்படைத்ததன் பின்னர் 2015க்கு தேவையான நூல்கள் நாடு பூராகவும் அமைந்துள்ள அறநெறிப்பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டது. அறநெறிப் பாடசாலையின் 8ம் தரத்திற்கான நூலானது இவ்வருடம் மீள் பதிப்புச் செய்யப்பட்டது.

மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை - 21
பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளின் எண்ணிக்கை - 9846
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நூல்களின் எண்ணிக்கை - 1973,239

அட்டவணை 03.5 அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல் விநியோகம் - 2015 சராம்சம்.

## 03.9. புத்த ஜயந்தி நூல் நிலையம்

பொதுமக்களின் தேவை கருதி சமய நூல்களை விற்பனை செய்யும் பணியானது பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் புத்த ஜயந்தி நூல் நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. சரள சிங்களத்தில் எழுதப்பட்ட திரிபிடகங்கள், பௌத்த கலைக் களஞ்சியம் அடங்கலாக சுமார் அறுபத்துநான்கு (64) வகையான நூல்கள் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.



2015இல் இத்தகைய நூல்கள் எண்ணூற்று அறுபத்து நான்கு (864) வரையில் விற்பனை செய்யப்பட்டதுடன் இதன் மூலம் ரூ.736,127.00 நிதியானது கிடைக்கப்பெற்றது. இவ்வாறு விற்பனையின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியானது அந்தந்த நாட்களிலிலேயே பிரதான திணைக்களத்தில் ஒப்படைக்கப்படும்.

**நூல் விற்பனை நிலையத்தை விளம்பரப்படுத்துவதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்.**

- மாவட்ட மற்றும் பிரதேச சாசனப் பாதுகாப்புச்சபைகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
- பத்திரிகை மற்றும் இணையத்தளம் மூலம் விளம்பரம் மற்றும் தகவல்களை வழங்குவதன் பொருட்டு பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் தகவல் பிரிவிற்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நூல் நிலையத்தின் முன்னால் விளம்பரப் பலகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- ஆகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட நூல்களின் விபரம் அடங்கிய பட்டியலொன்று நூல் நிலையத்தின் முன்னால் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

நூல் நிலையத்தில் உள்ள நூல்களுக்கு கரையான்களால் பாதிப்பு ஏற்படாமலிருக்க பூச்சி கொல்லிகள் உபயோகப்படுத்தப்பட்டன. நூல்களை வைப்பதெற்கென திணைக்களத்திற்கு சொந்தமான இராக்கை ஒன்று புனரமைப்பு செய்யப்பட்டு நூல் நிலையத்திற்கு வழங்கப்பட்டது.

# 04
# அபிவிருத்திப்பிரிவு

பௌத்த கலாசார பண்புகளைப் பேணும் சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்குடன் விகாரைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் பொருட்டு இத்திணைக்களத்தினால் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள விகாரைகளின் நிர்மாணாப் பணிகளுக்கும் புனரமைப்பு பணிகளுக்கும் நிதியுதவி வழங்கும் செயற்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## 04.1. வசதி குறைந்த விகாரைகளுக்கு நிதியுதவி வழங்குதல்

இத்திட்டத்தின் கீழ் 2015இல் 20 மாவட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் நாடெங்கிலும் உள்ள வசதி குறைந்த விகாரைகளின் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரதான நோக்கமாவது அழிவடையும் நிலையிலும் சேதமடைந்தும் காணப்படும் விகாரைகளை புனரமைத்து அவற்றை பௌத்த மக்களின் சிந்தனை மேம்பாட்டை விருத்தி செய்யும் பொருட்டு பயன்படத்தக்க வகையில் மாற்றிமைப்பாதாகும்.

| தொடர் இல | மாவட்டம | விகாரைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதி | தொடர் இல | மாவட்டம | விகாரைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதி |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | கொழும்பு | 21 | 1,050,000.00 | 13 | காலி | 4 | 200,000.00 |
| **2** | கம்பஹா | 46 | 2,450,000.00 | 14 | அம்பாறை | 10 | 1,000,000.00 |
| **3** | களுத்துறை | 22 | 1,100,000.00 | 15 | மாத்தளை | 3 | 150,000.00 |
| **4** | கண்டி | 33 | 1,650,000.00 | 16 | மொனராகலை | 21 | 2,100,000.00 |
| **5** | குருநாகல் | 53 | 2,750,000.00 | 17 | அநுராதபுரம் | 28 | 2,900,000.00 |
| **6** | கேகாலை | 29 | 1,500,000.00 | 18 | திருகோணமலை | 19 | 1,900,000.00 |
| **7** | அம்பாந்தோட்டை | 4 | 400,000.00 | 19 | மட்டக்களப்பு | 3 | 400,000.00 |
| **8** | புத்தளம் | 12 | 1,200,000.00 | 20 | மன்னார் | 5 | 500,000.00 |
| **9** | மாத்தறை | 4 | 200,000.00 | 21 | வவுனியா | 1 | 100,000.00 |
| **10** | நுவரெலியா | 21 | 2,100,000.00 | 22 | முல்லைத்தீவு | 5 | 500,000.00 |
| **11** | பதுளை | 347 | 18,550,000.00 | 23 | யாழ்ப்பாணம் | 5 | 500,000.00 |
| **12** | பொலன்னறுவை | 17 | 1,700,000.00 | 24 | கிளிநொச்சி | 1 | 100,000.00 |
| **மொத்தம் = Rs. 45,000,000.00** | | | | | | | |


அட்டவணை 04.1 வசதி குறைந்த விகாரைகளுக்கான நிதியுதவி 2015

இத்திட்டத்தின் கீழ் 714 விகாரைகளின் அபிவிருத்தி பணிகளின் பொருட்டு கிடைக்கப் பெற்ற ரூ 45,000,000.00 ரீதியில் ரூ 43,917,107.00 நிதியானது செலவு செய்யப்பட்டது.

## 04.2. சில்மாதாக்களின் ஆராமைகளை அபிவிருத்தி செய்தல்

2015இல் சில்மாதாக்களின் ஆராமைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் களனி சில்மாதா தலைமையகத்தின் நிர்மாணப்பணிகளுக்கென ரூ7,000,000.00 நிதி ஒதுக்கப்பட்டதுடன் தற்போது இதன் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கான மரத் தளபாடங்களை கொள்வனவு செய்யும் பணியும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கென ரூ.6,978,111.00 செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் முலட்டியனை பியதாஸ ரத்நாயக்க ஞாபகார்த்த சில்மாதா பயிற்சி நிலையத்தின் நிர்வாக செலவுகள் மற்றும் நிர்மாணப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட ரூ 4,000,000.00 நிதியில் ரூ 3,399,249.00 நிதியானது செலவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையத்தினூடாக குறுகிய மற்றும் நீண்டகால கற்கை நெறிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நாடெங்கிலும் வாழும் சில்மாதாக்கள் தமது சமயச் சேவைகளை விருத்தி செய்வதற்கும், சிந்தனை வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் மற்றும் கல்வியறிவை மேம்படுத்துவதற்குமான வாய்ப்பை ஏற்படுத்தியமையானது 2015 பெற்றுக் கொண்ட பயனாகக் கூறமுடியும்.




அட்டவணை 04.1 2015.12.31 ஆம் திகதி இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சில்மாதா ஆராமைகளின் எண்ணிக்கை

## 04.3. உபசம்பதா உற்சவங்களுக்கான நிதியுதவி வழங்குதல்

2015இல் உபசம்பதா உற்வசங்களுக்கென ரூ2,750,000.00 நிதியானது ஒதுக்கப்பட்டிருந்ததுடன் வெவ்வேறு நிக்காயக்களைச் சேர்ந்த 713 பிக்குமார்களில் உபசம்பதா சட்ங்குகளின் போக்குவரத்து மற்றும் காவியுடைகளுக்கென ரூ 2,141,151.00 செலவு செய்யப்பட்டது. இவ்வாறு உபசம்பதா சடங்குகளுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலமாக சாசனத்தின் நிலையுறுதிக்கும் பிக்குமார்களின் ஆழ்ந்த சமய அறிவின் வளர்ச்சிக்கும் ஏதுவாக அமைகின்றது.

## . 04.4. சிவுபசவுக்கான நிதியுதவி வழங்குதல்

2015இல் அதற்கென ரூ1,615,890.00 நிதியானது ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இம்மொத்த நிதித்தொகையும் சிவுபசவுக்கான நிதியாக பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையானது "சிவுபச" நிதியுதவி கிடைக்கப்பெறாத பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் பிக்குமார்கள் தமது கல்வி மற்றும் சமய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உறுதுணையாக அமைவது மட்டுமன்றி சாசனத்தின் நிலையுறுதிக்கும் பயனுள்ளதாக காணப்படுகின்றது.

## 04.5. பௌத்த சமய எழுத்தாளர்களை ஊக்குவித்தல்

பௌத்த மக்களிடையே சமய அறிவை மேம்படுத்தும் பொருட்டு பௌத்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பதன் மூலமாக பௌத்த கலாசார பண்புகளை மேம்படுத்தக் கூடிய வகையிலான நூல்களை தயாரிக்கும் நோக்கத்துடன் இதற்கென 2015இல் ரூ250,000.00 நிதியானது ஒதுக்கப்பட்டது. இதன் போது 17 எழுத்தாளர்களிடமிருந்து சுமார் 916 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன் போது ரூ 163,836.00 நிதியானது செலவு செய்யப்பட்டது.

.

## 04.6. அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதியுதவியினை வழங்குதல்

| மாவட்டம் | கட்டிடங்கள் | நிதி | உபகரணங்கள் | நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1.கொழும்பு | 10 | 1,000,000.00 | 0 | - | 1,000,000.00 |
| 2.கண்டி | 0 | | 17 | 850,000.00 | 850,000.00 |
| 3.நுவரெலியா | 4 | 400,000.00 | 0 | - | 400,000.00 |
| 4.கேகாலை | 4 | 400,000.00 | 0 | - | 400,000.00 |
| 5.அநுராதபுரம் | 26 | 2,600,000.00 | 23 | 1,150,000.00 | 3,750,000.00 |
| 6.பொலன்னறுவை | 13 | 1,300,000.00 | 6 | 300,000.00 | 1,600,000.00 |
| 7.குருநாகல் | 6 | 600,000.00 | 5 | 250,000.00 | 850,000.00 |
| 8.புத்தளம் | 0 | - | 15 | 750,000.00 | 750,000.00 |
| 9.புதுளை | 4 | 400,000.00 | 16 | 800,000.00 | 1,200,000.00 |
| 10.மொனராகலை | 17 | 1,700,000.00 | 8 | 400,000.00 | 2,100,000.00 |
| 11.திருகோணமலை | 5 | 500,000.00 | 1 | 50,000.00 | 550,000.00 |
| 12.முல்லைத்தீவு | 0 | - | 7 | 350,000.00 | 350,000.00 |
| 13.அம்பாறை | 1 | 100,000.00 | 0 | - | 100,000.00 |
| 14.கம்பஹா | 1 | 100,000.00 | 0 | - | 100,000.00 |
| மொத்தம் | 91 | 9,100,000.00 | 98 | 4900000 | 14,000,000.00 |

அட்டவணை 04.2-2015 இல் வழங்கப்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கான நிதியுதவி பற்றிய விபரம்

இத்திட்டத்தின் கீழ் 2015இல் அறநெறிப்பாடசாலைக் கட்டிடங்களின் நிர்மாணத்திற்கும் உபகரணங்களின் விநியோகத்திற்குமென ரூ 14,000,00.00 நிதியானது ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் உரிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் உபகரணங்களை வழங்குவதற்குமாக ரூ. 13 ,308,183.00 செலவு செய்யப்பட்டது.

இதன் மூலம் அறநெறிப் பாடசாலையின் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்ய முடிந்ததுடன் மாணவர்கள் மேலும் அறநெறிக் கல்வியில் ஈடுபடுவதற்கும் உறுதுணையாக இருந்தது.

## 04.7. விகாரைகளின் நிர்வாக சங்கங்ளை பதிவு செய்தல்

இதன் போது 2015 இல் 12 மாவட்டங்களில் 30 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன.

| மாவட்டம் | அநுராதபுரம் | களுத்துறை | கேகாலை | குருநாகல் | கொழும்பு | கம்பஹா | காலி | பொலன்னறுவை | கண்டி | மாத்தறை | மாத்தளை | அம்பாந்தோட்டை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சங்கங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 04 | 05 | 03 | 03 | 03 | 03 | 02 | 03 | 01 | 01 |

Table 04.3 – Number of Temple Performance Societies registered in the year 2015

| மாவட்டம் | அநுராதபுரம் | களுத்துறை | கேகாலை | குருநாகல் | கொழும்பு | கம்பஹா | காலி | பொலன்னறுவ | கண்டி | மாத்தறை | மாத்தளை | அம்பாந்தோட் | புத்தளம் | மட்டக்களப்பு | நுவரெலியா | மொனராகலை | பதுளை | இரத்தினபுரி | திருகோணமலை | அம்பாறை | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பரிபாலன சபைகளின் எண்ணிக்கை | 173. | 144 | 176 | 492 | 93 | 179 | 200 | 72 | 271 | 194 | 85 | 164 | 108 | 4 | 93 | 74 | 325 | 188 | 16 | 22 | 16 |

Table 04.4. - Number of Registered Dayaka Sabhas by the year 2015

## 04.8. சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயற்பாடுகளை ஊக்குவித்தல்

### 04.8.1. உபகரணச் செலவுகள

சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயற்பாடுகளை ஊக்குவித்தலின் கீழ் விகாரையின் தேவையின் பொருட்டு மேசைகள், வாங்குகள், மற்றும் கணணி போன்றவற்றை பெற்றுக்கொடுக்கும் இத்திட்டத்தின் கீழ் 2015 இல் இதற்கென ரூ 4,000,000.00 நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதன் போது மொத்த நிதிம் செலவு செய்யப்பட்டது.

இதன் மூலம் சாசனப் பாதுகாப்புச் சபைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடிந்தது



### 04.8.2. சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செலவுகளை ஏற்றுக்கொள்ளல்

இதன்போது சாசனப்பாதுகாப்புச் சபைகளின் கூட்டங்களை நடாத்துதல் அவற்றை ஒழுங்கு செய்தல் மற்றும் அவற்றில் கலந்து கொள்ளுதல், பிக்குமார்களின் போக்குவரத்து செலவுகளை வழங்குதல் போன்றன இடமபெறுகின்றன. 2015 இதற்கென ரூ 7000,000.00 நிதியானது ஒதுக்கப்பட்டதுடன் இதில் ரூ 6898,919.00 நிதியானது செலவு செய்யப்பட்டது.

காகிதாதிகள், போக்குவரத்து செலவு மற்றும் தபால் செலவுகளுக்கென செயலாளர் தேரர்களுக்கு ஒரு பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைக்கென வழங்கப்படும் நிதி ரூ 15,000.00

காகிதாதிகள், போக்குவரத்து செலவு மற்றும் தபால் செலவுகளுக்கான ஒரு மாவட்டத்திற்காக சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயலாளர் தேரர்களுக்கென வழங்கப்படும் நிதி ரூ 7500.00

## 04.9. தேசிய உற்சவங்களை ஒழுங்கு செய்தல்

### 04.9.1. தேசிய சுதந்திர தின பிரித் போதனை வைபவம் மற்றும் அன்னதான நிகழ்வு

இந்நிகழ்வானது தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடும் நோக்குடன் வருடந்தோறும் இடம்பெறும் சுதந்திர விழாவுடன் இணைந்து நடாத்தப்படும் ஒரு சமய நிகழ்வாகும். இதன் போது கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வருடந்தோறும் சுதந்திர தினத்திற்கு முந்திய தினமொன்றில் இரவு முழுவதும் பிரித்போதனை இடம்பெறுவதுடன் மறுநாள் காலையில் பிக்குமார்களுக்கான அன்னதான நிகழ்வும் இடம்பெறுகின்றது.

2015 இல் இதன் போது ரூ 976,855.48 செலவு செய்யப்பட்டது இதன் மூலம் தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடியது மட்டுமன்றி சமய நிகழ்வின் மூலமாக மக்களின் சிந்தனைகளை மேம்படுத்தக் கூடியதாகவும் அமைந்தது

### 04.9.2. தேசிய வெசாக் உற்சவம்




வருடந்தோறும் வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு தேசிய வெசாக் உற்சவமானது இத்திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்றது. இதன் போது தேசிய ரீதியாக அரச அனுசரனையுடன் குறித்தவொரு பிரதேசத்தை தெரிவு செய்து அப்பிரதேசத்திலுள்ள விகாரைகளின் அபிவிருத்திக்கான நிதியுதவிகளை வழங்குவதுடன் பாடசாலை மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சிந்தனை ரீதியான மேம்பாட்டின் பொருட்டும் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2015 இல் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள மஹியங்கனை ராஜமஹா விகாரையைக் மையமாகக் கொண்டு இந்த தேசிய உற்வசமானது கொண்டாடப்பட்து. இதற்கென ஒதுக்கப்பட்ட ரூ 215,455.80 நிதியில் ரூ 215 755.80 நிதிானது செலவு செய்யப்பட்டுள்ளது.

## 04.9.3. சங்கமித்தா ஞாபகார்த்த உற்சவம்

2323 ஆவது சங்கமித்தா ஞாபகார்த்த உற்சவமானது 2015 டிசம்பர் மாதம் 06 மற்றும் 07 ஆம் திகதிகளில் அநுராதபுரத்தில் இடம்பெற்றது. இதில் சங்கமித்தா பெரஹராவானது டிசம்பர் 06 ஆம் திகதி இடம்பெற்றதுடன் இப்பெரஹாராவை மையமாகக் கொண்டு விஹாரமஹா தேவி ஆராமையை மையமாகக் கொண்டு நாடெங்கிலுமிருந்து 16 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 800 சில்மதாக்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

வருடந்தோறும் நடாத்தப்படுகின்ற அகில இலங்கை சில்மாதா தேசிய சம்மேளமானது டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி அநுராதபுரம் மகாவிகாரையின் சன்னிபாத அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புத்தசாசன அமைச்சர், பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் அதிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அட்டவணை 04.5 சாசனப் பாதுகாப்புச் சபைகளின் பொருட்டு கணனி மற்றும் அலுவலக உபகரணங்களை பெற்றுக் கொள்வதன் பொருட்டு நிதியுதவி வழங்குதல்.

| தொடர் இலக்கம் | மாவட்டம் | ஒதுக்கப்பட்ட நிதி | தொடர் இலக்கம் | மாவட்டம் | ஒதுக்கப்பட்ட நிதி |
|---|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | 172,000 | 10 | கண்டி | 316,000 |
| 02 | கம்பஹா | 632,000 | 11 | அம்பாறை | 228,000 |
| 03 | களுத்துறை | 430,000 | 12 | குருநாகல் | 56,000 |
| 04 | காலி | 308,000 | 13 | புத்தளம் | 256,000 |
| 05 | மாத்தறை | 258,000 | 14 | அநுராதபுரம் | 168,000 |
| 06 | அம்பாந்தோட்டை | 174,000 | 15 | பொலன்னறுவை | 220,000 |
| 07 | மாத்தளை | 148,000 | 16 | பதுளை | 108,000 |
| 08 | நுவரெலியா | 100,000 | 17 | மொனராகலை | 1,208,000 |
| 09 | கோலை | 60,000 | 18 | இரத்தினபுரி | 208,000 |

Table 04.5 - Providing provisions for obtaining office equipment including computers for Sasanarakshaka activities.

## 04.10. ஈமைச் சடங்குகளுக்கான செலவை மேற்கொள்ளுதல்

இத்திட்டத்தின் கீழ் இறைபதம் எய்தும் வணக்கத்திற்குரிய பிக்குமார்களின் ஈமைச் சடங்குகளுக்கு செலவாகும் நிதியை பெற்றுக்கொடுப்பதுட்ன 2015 இதற்கென ஒதுக்கப்பட்ட ரூ 1750,000.00 நிதியில் 1721.00.00 நிதியானது செலவு செய்யப்பட்டது.

# 05
# கருத்திட்டப்பிரிவு

## 05.1. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் ஆற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சிதிதட்டம்

அறநெறிப் பாடசாலைகளின் பிரதான ஆசிரியர்களின் செயற்திறனை விசேடமானதும் மேம்பாடுடையதுமான விளங்கும் பொருட்டு 2015 இல் பிரதான ஆசிரியர்கள் மற்றும் உப பிரதான ஆசிரியர்களுக்கான நிகழ்ச்சிதிட்டம் நடாத்தப்பட்டது. இதன் நோக்கம் அறநெறிக் கல்வியை தரமானதாகக் மேம்படுத்துவதாகும்.

2015 இல் 08 மாவட்டங்களில் மொத்தமாக 59 பயிற்சி நிகழ்வுகள் நடத்தப்பட்டதுடன் இதில் கலந்துக்கொண்ட பிரதான மற்றும் உா பிரதான ஆசிரியர்களின் எண்ணிக்கை 7642 ஆகும். இக் கருத்திட்டத்திற்கென ரூ 6000,000.00 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூ.5,800.000.00 செலவு செய்யப்பட்டது.

## 05.2. தஹம் சரசவி கற்கைநெறி

2015 ஆம் வருடத்திற்கான "தஹம் சரசவிய" டிப்லோமா கற்கை நெறியானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்துடன் இணைந்து நடாத்தப்படுகின்றது. இதற்கென அனுமதிக்கப்பட்ட உத்தேச செலவு மதிப்பீடு ரூ 4597,350.00 ஆகும். நாடு முழுவதும் 24 மத்திய நிலையங்களில் இக் கற்கை நெறியானது கற்பிக்கப்படுவதுடன் இதனைக் கற்கும் ஆசிரிர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படுவதில்லை. இதுவரை மேற்கூறப்பட்ட உத்தேச செலவு மதிப்பீட்டிற்கமைய பல்கலைகழகத்திற்கு ரூ.2,699,109.71 நிதியானது வழங்கப்பட்டுள்ளது.

2016 மார்ச் மாதத்தினுள் அதாவது கடந்த வருடத்தில் 2013 / 2014 ஆம் வருடங்களுக்கான தஹம் சரசவி கற்கை நெறியில் சித்தியடைந்தோருக்கான பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே போன்று 2016 இல் இக்கற்கை நெறியை ஸ்ரீ லங்கா பாளி-பௌத்த பல்கலைகழகத்துடன் இணைந்து நடத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.






2015 இல் இக்கற்கை நெறிக்கான ரூ. 4,000,000.00 நிதியானது ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் பேராசிரியர்களுக்கான கொடுப்பனவுகளுக்கு ரூ.1,800,000 உம் கற்கை நெறி ஆரம்ப உற்சவத்திற்கென ரூ. 190,000 உம் ஜயவர்தனபுர பல்கலைகழகத்திற்கு ரூ.1,044,000 உம் ஸ்ரீலங்கா பாலி-பௌத்த

பல்கலைகழகத்திற்கு பட்டமளிப்பு விழாவின் பொருட்டு ரூ.810,381.50 உம் ஒதுக்கப்பட்டது. அதற்கமைய மொத்தச் செலவு ரூ. 9,148,161.00 ஆகும்.

## 05.3. அறநெறிப்பாடசாலை ஆசிரிர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

ஒவ்வவொரு தலைமுறையினருக்கும் புனிதமான பௌத்த தர்மத்தின் சாரத்தை கற்பிக்கும் பிரதான இடம் அறநெறி பாடசாலையே ஆகும். பௌத்த தர்ம சிந்தனைகளைக் கொண்ட சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு சுயவிருப்பத்தின் பேரில் ஈடுபாட்டுடன் சேவையாற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான அடைாள அட்டை வழங்கும் செயலானது மேற்கொள்ளப்படுகின்றது. 2015 இல் ரூ.224,236.66 செலவில் சுமார் 2827 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.




படம் 05.1 அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான அடையாள அட்டையின் மாதிரி வடிவம்

## 05.4. பௌத்த கலைக் களஞ்சியம்

பௌத்த கலைக் களஞ்சியத்தின் இறுதி “சுசீ” பகுதியின் மாதிரிப் பிரதியானது அச்சிட்டு பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனைப் பரீசீலனை செய்து இறுதி அச்சுப் பதிப்பின் பொருட்டு தேவையான பிரதான ஆசிரியர்கள், பிரதி எழுத்தாளர், மற்றும் உதவி எழுத்தாளர் எனும் பதவிகளுக்கு உத்திரோகத்தர்களை இணைத்துக் கொள்வதன் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பதவிகளுக்கான உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் பொருட்டு 2015 இல் ரூ 1300,000.00 நிதியானது ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூ.780,000 செலவு செய்யப்பட்டுள்ளது.

## 05.5. திரிபிடகத்தை மொழி பெயர்த்தல்

ஜாதக பாளி 1,2 மற்றும் 3 ஆகிய நூல்கள் அச்சிட்டு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது அவற்றின் விலைகள் தீர்மானிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

“மெதும் சகிய த்ருதீய பாகய மற்றும் ஆபதான பானி” எனும் நூலின் அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திரிபிடகங்களின் மொழி பெயர்ப்புப் பணிகளுக்கென 2015 இல் ரூ. 2,500,000.00 நிதியானது ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இம்மொத்த நிதியும் இதன் பொருட்டு செய்யப்பட்டுள்ளது.

# 06
# பிக்குமார்களை பதிவு செய்யும் பிரிவு

## 06.1. சாமனேர உபசம்பதா சான்றிதழ்களை விநியோகித்தல் மற்றும் பிக்குமார்களுக்கான அடையாள அட்டைகளை விநியோகித்தல்

இப்பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- ❖ புதிய சாமனேர உறுதிப் பத்திரங்களை பதிவு செய்தல்
- ❖ புதிய உபசம்பதா உறுதிப் பத்திரங்களை பதிவு செய்தல்
- ❖ துறவறத்திலிருந்து விலகிச் சென்றமைக்கான அத்தாட்சி சான்றிதழ்களை விநியோகித்தல்
- ❖ சாமனேர மற்றும் உாசம்பதா உறுதிமொழிப் பத்திரங்கள் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுதல்
- ❖ பதிவு செய்யப்பட்ட சாமனேர மற்றும் உபசம்பதா உறுதிமொழிப் பத்திரங்களுக்கான சான்றிதழ்களை விநியோகித்தல்
- ❖ சாமனேர, மற்றும் உபசம்பதா தகவல்களை அன்றாடம் கணனிப்படுத்தல்
- ❖ சட்ட ரீதியான பிரச்சினைகளின் போது தேவையான சாட்சிகளை வழங்குதல்

**<u>2015 ஆம் வருடத்தில்</u>**

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட சாமனேர பிக்குமார்களின் எண்ணிக்கை | 3151 |
| பதிவு செய்யப்பட்ட உபசம்பதா பிக்குமார்களின் எண்ணிக்கை | 973 |
| துறவறத்தில் இருந்து விலகுவதற்கான அத்தாட்சி சான்றிதழ் விநியோகம் | 1200 |
| விநியோகிக்கப்பட்ட பிக்குமார்களுக்கான அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | 1440 |

அதே போன்று இப்பிரிவினால் சாமனேர மற்றும் உபசம்பதா பிக்குமார்களின் தகவல்களை கணனிமயப்படுத்துவதன் பொருட்டு கணனி மென்பொருள் ஒன்று நிர்மானிக்கப்பட்டுள்ளது. இம் மென்பொருளின் மூலமாக இதுவரை 14,303 உபசம்பதா பிக்குமார்களின் விபரங்களும், 25,714 சாமனேர பிக்குமார்களின் விபரமும் தகவல் வலையமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் சாமனேர மற்றும் உபசம்பதா சான்றிதழ்களின் பொருட்டு விண்ணப்பிப்பவர்களுக்கு அவற்றை விறைவாக விநியோகிக்க முடிகின்றது.

# 07
# தகவல் தொழிநுட்ப பிரிவு

பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் தகவல் பிரிவானது 2015 பெப்ரவரி 14 ஆம் திகதியே உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது இருப்பினும் கடந்த 07 வருடங்களாக தகவல் பிரிவினால் திணைக்களத்திற்கு தேவையான சேவைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டே வந்தது. இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள் கிழே குறிப்பிடப்பட்டுள்ளனவாகும்.

## 07.1. இலங்கையின் பௌத்த சமம் தொடர்பான தகவல்களை சேகரித்தல்

நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள அனைத்து விகாரைகளிலும் விபரங்கள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது. இதன் போது விகாரைகளை ராஜமஹா விகாரை, புராண விகாரை, மகா விகாரை, பௌத்த மத்திய நிலையம், சர்வதேச பௌத்த மத்திய நிலையம், ஆரண்யசேனாசனைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்து அறநெறிப்பாடசாலைகள் பற்றிய தகவல்களை கணனி மயப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 07.2. புதிய தகவல்களை சேகரித்தல

இதற்கமைய புதிய தகவல்களை சேகரிக்கும் பணியானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- இலங்கையிலுள்ள விகாரைகளின் பெயர் பட்டியலை ஒழுங்கு செய்தல்.
- இலங்கையிலுள்ள பிக்குமார்கள் மற்றும் நிலையங்கள் பற்றிய தகவல்கள்.
- விகாரைகள் சங்கம் பிக்குமார் பற்றிய கணக்கெடுப்பு ஒன்றை 2016இன் முதல் காலாண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது.

## 07.3. பாலி மேம்பாட்டு கற்கை நெறி





அறநெறிப்பாடசாலைகள் பிரிவில் பாலி மொழி அறிவைக் கொண்ட ஆசிரியர்களின் பற்றாகுறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்நிகழ்வானது வருடம் தோறும் முன்னெடுக்கப்படுகின்றது. இதன் போது அறநெறிப்பாடசாலை ஆசிரியருக்கு பாலி மொழி பற்றிய அறிவை வழங்கி அவர்களை கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதே நோக்கமாகும். இதற்கு மேலதிகமாக அவர்கள் திரிபீடங்களை வாசிப்பதற்கான அறிவையும் பெற முடிகின்றது. பாளி

மொழியில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களால் தயாரிக்கப்பட்ட இக்கற்கை நெறியானது 19 மாவட்டங்களில் 30 மத்திய நிலையங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இக்கற்கை நெறியினை சுமார் 1300 பேர் பயின்று வருகின்றனர்.

## 07.4. ஊடக சேவைகள் மற்றும் ஏனைய சேவைகள்

- பல்வேறுபட்ட தேவைகளுக்கு அமைய அனைத்து பொது மக்களினதும் பயன்பாட்டின் பொருட்டு சேகரிக்கப்பட்ட தகவல்கள் ஒழுங்கு செய்யப்பட்டு விடுவிக்கப்படுகின்றது.
- திணைக்களத்தின் உத்தியோகபுர்வ இணையத்தளமான www.buddhistdept.gov.lk எனும் இணையத்தளத்தில் புதிய தகவல்கள் அன்றாடம் கணனி மயப்படுத்தப்படுகின்றது.




- திணைக்களத்தின் அன்றாட பணிகள், மற்றும் விழாக்களின் போதான விளம்பரங்கள், ஊடக அனுசரனை, கலந்துரையாடல்கள் மற்றும் ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# 08
# கணக்கியல் பிரிவு

சம்புத்த சாசனத்தின் நிலையுறுதி, வளர்ச்சி, மற்றும் மேம்பாடு போன்றவற்றை ஏற்படுத்துவதற்கான பணிகளை சிறப்பாக திட்டமிட்டு செய்து நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு திரைசேறியினால் ஒதுக்கப்படும் நிதியை வீண் விரயம் இல்லாது மிகவும் சிறந்தது என அறியப்படும் செயற்பாடுகளின் பொருட்டு ஈடுபடுத்துவதும் அது பற்றிய செலவு விபரங்களை திரைச்சேறிக்கு மாதாந்தம் மற்றும் வருடாந்தம் கணக்கியல் அறிக்கையை சமர்பிப்பதும் அத்துடன் திரைசேறி கோரும் ஏனைய அறிக்கைகளை சமர்பிப்பதும் இப்பிரிவின் பணியாகும்.

❖ **<u>கணக்கியல் பிரிவில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை.</u>**

| | | | |
|---|---|---|---|
| பிரதான கணக்காளர் | 01 | பௌத்த சமய கலாசார அலுவலரிகள் | 01 |
| கணக்காளர் | 01 | அபிவிருத்தி உதவியாளர் | 01 |
| பிரிவுப்பொறுப்பாளர் | 01 | முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| கணக்கியல் உதவியாளர்கள் | 02 | அலுவலக உதவியாளர் | 01 |

| செலவு விபரம் | மதிப்பீடு | செலவு | மீதி |
|---|---|---|---|
| **மீண்டு வரும் செலவீனம்** | | | |
| அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிடுதல், விநியோகித்தல். 201-2-2-1-1501 | 80,000,000 | 79,799,519 | 200,381 |
| ஆறநெறிப் பாடசாலைகளுக்கான பரீட்சைகளை நடாத்துதல். 201-2-2-1508 | 20,464,000 | 17,510,072 | 2,953,928 |
| அகில இலங்கை சாசன பாதுகாப்புச் சபைகளின் நிர்வாகம். 201-2-2-0-1405*3 | 6,700,000 | 6,598,919 | 101,081 |
| பிக்குமார்களுக்கான அன்னதானம் வழங்குதல். - 201-2-2-0-1405*7 | 1,615,890 | 1,615,890 | - |
| தேசிய சில்மாதா சங்கத்தை இயக்குதல். 201-2-2- 1405*7 | 2,051,412 | 2,051,412 | - |

| | | | |
|---|---|---|---|
| அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான அடையாள அட்டை விநியோகம்.<br>201-2-2-0-1405*7 | 359,821 | 359,821 | - |
| திரிபீடங்களை மொழிபெயர்த்து அச்சிடுதல்.<br>- 201-2-2-0-1405*2 | 2,090,000 | 2,086,361 | 3,639 |
| பௌத்த கலைக்களஞ்சியத்தை தொகுத்தல்.<br>201-2-2-0-1405*2 | 1,300,000 | 780,000 | 520,000 |
| அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகளை வழங்குதல்.<br>201-2-2-2- 1501 | 100,000,000 | 99,065,976 | 934,024 |
| பௌத்த அறிஞர்களை கௌரவித்தல்.<br>- 201-2-2-0-1405*7 | 50,000 | 50,000 | |
| பௌத்த கலைகளை மேம்படுத்தல்.<br>- 201-2-2-0-1405*7 | 944,930 | 944,930 | - |
| அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல் கணிப்பீடு.<br>- 201-2-2-1508 | 16,536000 | 16,252,785 | 283,215 |
| உபசம்பதா உற்சவங்கள்<br>- 201-2-2-0-1405*1 | 2,750,000 | 2,141,151 | 608,849 |
| பிக்குமார்களின் ஈமைச் சடங்குகள்.<br>- 201-2-2-0-1405*5 | 2,460,000 | 2,416,000 | 44,000 |
| அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலக கொடுப்பனவுகள். 201-2-2-3-1501 | 170,000,000 | 152,624,785 | 7,375,215 |
| தேசிய வெசாக் உற்சவம். - 201-2-2-0-1405*7 | 215,456 | 215,456 | - |
| **மூலதனச் செலவுகள்.** | | | |
| விகாரைகளுக்கான நிதியுதவி. - 201-2-2-7-2502 | 45,000,000 | 43,917,107 | 1,082,893 |
| சாசன பாதுகாப்புச் சபைகளுக்கு தேவையான உபகரணங்களை வழங்குதல். 201-2-2-9-2502 | 4,000,000 | 3,865,321 | 134,679 |
| தஹம் சரசவிய. - 201-2-2-11-2502 | 10,000,000 | 9,148,161 | 851,839 |
| அறநெறிப் பாடசாலை கட்டிடங்களை நிர்மாணித்தல்.<br>201-2-2-8-2502 | 14,000,000 | 13,308,183 | 691,817 |
| அறநெறிப் பாடசாலைகளுக்கான உபகரணங்களை வழங்குதல<br>- 201-2-2-8-2502 | 14,000,000 | 13,308,183 | 691, 817 |
| சில்மாதா ஆராமைகளை நிர்மாணித்தல். - 201-2-2-10-2502*2 | 7,000,000 | 6,978,111 | 21,889 |
| தென்னிலங்கை சில்மாதா கல்வி நிலையத்தை நிர்வகித்தல -<br>201-2-2-10-2502*1 | 4,000,000 | 3,130,130 | 869,870 |
| வசதி குறைந்த விகாரைகளுக்கு தேவையான நிதியுதவிகளை வழங்குதல 201-2-2-7-2502 | 45,000,000 | 43,917,107 | 1,082,893 |

அட்டவணை 8.1 – ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் 2015 மதிப்பீடு செய்யப்பட்ட நிதியானது செலவு செய்யப்பட்ட விபரம்.

# 09
# உள்ளக கணக்காய்வு பிரிவு

சம்புத்த சாசனத்தின் நிலையுறுதி மற்றும் மேம்பாட்டின் பொருட்டு 1931இன் 19ம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் மூலம் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு உதவி புரிதல் இப்பிரிவின் பணியாகும். அதற்கமைய 2013.07.01ஆம் திகதி பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவானது நிறுவப்பட்டது.

<u>நோக்கம்.</u>

- உள்ளக நிர்வாக கட்டமைப்பை பலப்படுத்துவதற்கு உதவுதல்.
- கணக்கியல் நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு உதவுதல்.
- சொத்துக்களின் சிறந்த பாவனைக்கு உதவி புரிதல்.

இப் பிரிவானது பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களுடன் இயங்கி வருவதுடன் இப் பிரிவானது திணைக்களத்தின் நோக்கங்களை அடைவதற்கு சிறப்பான உறுதுணையாக அமைந்துள்ளது.

## 09.1. உள்ளக கணக்காய்வாளர் பிரிவினால் 2015இல் மேற்கொள்ளப்பட்ட விஷேட செயற்திட்டங்கள்.

1. விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் சட்டமூலத்தின் விதிமுறைகளுக்கு அமைய வழிபாட்டு தலங்கள் பின்பற்ற வேண்டிய வங்கிக்கணக்குகளை அறிமுகம் செய்து அவற்றின் நிர்வாக கட்டமைப்பை பலப்படுத்துதல்.
2. சட்டமூலத்தின் 4(1) அத்தியாயத்தின் பிரகாரம் நிர்வகிக்கப்படும் வழிபாட்டு தலங்களின் வருமாணங்களை கணக்காய்வு செய்தல் மற்றும் அவற்றுக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் கூட்டங்களை நடாத்துதல்.
4. திணைக்களத்தின் ஏணைய பிரிவுகளால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளுக்கு தேவையான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் பெற்றுக்கொடுத்தல்.
5. திணைக்களத்தில் இடம்பெறும் விஷேட பணிகளுக்கு தேவையான ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்தல்.

# 10
# பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள்.

## 10.1. இரத்தினபுரி பிராந்திய அலுவலகம்

இரத்தினபுரி, பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதும் அவற்றை இலகுவாக நிறைவேற்றுவதற்குமாக இரத்தினபுரி பிராந்திய அலுவலகமானது நிறுவப்பட்டுள்ளது.

விஷேடமாக 2015இல் இவ் அலுவலகத்தினால் காணிகளை குத்தகைக்கு வழங்குதல், குத்தகை ஒப்பந்களை புதுபித்தல் மற்றும் மரங்களை வெட்டுவதற்கான அனுமதி பத்திரங்களை வழங்குதல் போன்ற பணிகளை சிறப்பான முன்னெடுக்க முடிந்தவுடன் இவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் காணப்படுகின்றது. விகாரைகளின் பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் மாணிக்க கல் அகழ்வுக்கான அனுமதிபத்திரங்களை வழங்குதலும் இடம்பெறுகின்றது.

| கடமைகள் | மாவட்டம் | | | மொத்த |
|---|---|---|---|---|
| | இரத்தினபுரி | பதுளை | மொனராகலை | |
| பொறுப்பாளர்களை நியமித்தல | 05 | 03 | 09 | 17 |
| காணிகளை குத்தகைக்கு வழங்குதல். | 45 | 175 | 68 | 288 |
| குத்தகை பெறுமதிகளை தீர்மாணித்தல | 25 | 250 | 30 | 305 |
| மரங்களை வெட்டுவதற்கும் அவற்றை கொண்டு செல்வதற்குமான அனுமதி பத்திரங்களை வழங்குதல். | 210 | 27 | 225 | 442 |
| அமரத்துவம் எய்திய பிக்குமார்களுக்கு சொந்தமான வங்கிக் கணக்குகளை விடுவித்தல். | 08 | 02 | 05 | 15 |
| விகாரை காணிகளுக்கான உறுதி பத்திரங்களை வழங்குவதற்காண அனுமதியை பெற்றுக் கொடுத்தல். | 01 | 02 | 03 | 06 |
| தண்டப் பணத்திற்கான வட்டியை வழங்குதல | 03 | - | - | 03 |
| விகாரைகள் தொடர்பான பிரச்சனைகளை தீர்த்தல். | 85 | 35 | 30 | 150 |
| விகாரைகளை பதிவு செய்வதன் பொருட்டு மஹாநாயக்க தேரர்களுக்கு கடிதங்களை அனுப்புதல். | 08 | 06 | 12 | 26 |
| மாணிக்கக்கல் அகழ்விற்கான உறுதிப் பத்திரங்களையும் சிபாரிசுகளையும் வழங்குதல். | 145 | - | 11 | 156 |
| மாணிக்கக் கல் அதழ்விற்காக வழங்கப்பட்டுள்ள உறுதிப் பத்திரங்களை நீடிப்பதற்கு தேவையான சிபாரிசுகளை வழங்குதல். | 181 | - | 04 | 185 |

அட்டவணை 10.1இல் இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தினால் 2015இல் மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

## 10.2. கண்டி பிராந்திய அலுவலகம்

<u>அலுவலகக் கட்டமைப்பு</u>

| | |
|---|---|
| பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் (கண்டி) | - 01 |
| பிரதான முகாமைத்துவ உதவியாளரகள் | - 01 |
| உதவி சட்ட ஆலோசகர் | - 01 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | - 01 |
| பௌத்த மத கலாசார உத்தியோகத்தர்கள் | - 04 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | - 05 |
| சாரதி | - 01 |
| அலுவலக உதவியாளர் | - 02 |
| **மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** | **- 19** |

<u>பரிபாலனத்திற்குட்படும் பிரதேசம்</u>

கண்டி மாத்தளை கேகாலை நுவரேலியா மாவட்டங்கள் மற்றும் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள மதியங்கனை ரஜமகா விகாரை மஹியங்கனை ரஜமகா விகாரை மஹியங்கனை சமன் தேவஸ்தானம் உள்ளடங்களாக பௌத்த விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) மற்றும் 4(2) அத்தியாயத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் மற்றும் தேவஸ்தானங்கள் உள்ளடக்கப்படும்.

| மாவட்டம் | 4(1) இன் கீழ் நிர்வகிப்படும் விகாரைகள் | 4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் | 4(1)இன் கீழ் பரிபாலிக்கப்படாத வழிபாட்டுத் தலங்கள் |
|---|---|---|---|
| கண்டி | 43 | 13 | 996 |
| மாத்தளை | 08 | 01 | 338 |
| கேகாலை | 17 | 03 | 512 |
| நுவரெலியா | 03 | 02 | 247 |
| பதுளை | 02 | 01 | - |
| மொத்தம் | 73 | 20 | 2093 |

அட்டவணை 10.2 - கண்டி பிராந்திய அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன பௌத்த வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தேவஸ்தானங்கள்

இவ்வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான அனைத்து பணிகளும் 1931 இல் 19 ஆம் இலக்கத்தைக் கொண்ட பௌத்த விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கமைய அவ் அலுவலகத்தினால் மேற் கொள்ளப்படுவதுடன் விகாரைகளுக்கான பொறுப்பாளர்களை நியமித்தல் ஸ்ரீ தலதா மாளிகைஇ நான்கு பிரதான தேவஸ்தானங்கள்இ வெளிப்புற தேவஸ்தானங்களுக்கான தியவுடன நிலமேக்களஇ பஸ் நாயக்க

நிலமேக்கள் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதற்கான தேர்தல்களை நடாத்துதல்இ பொறுப்பாளர் கட்டுப்பணத்தை வைப்புச் செய்தல் மற்றும் விடுவித்தல் வழிபாட்டுத் தலங்களின் சொத்துக்களை பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்தல் விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்களுக்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல் வருடாந்த வருமானக் கணக்குகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சித்தல் நிதியை விடுவித்தல்இ விகாரைகளின் பிரச்சனைகள் தொடர்பான பணிகளஇ ஸ்ரீதலதா பெரஹரா உபசம்பதா உற்சவங்களுக்கு உதவுதல்இ அறநெறிப் பாடசாலைகளின் உற்சவங்கள் மற்றும் ஏனைய சமய விழாக்களில் பங்கு பற்றுதல் மற்றும் தேவையான உதவிகளை வழங்குதல்.

2013 ஆகஸ்ட் மாதம் மாவட்ட செயலகத்தில் நிறுவப்பட்ட இவ் அலுவலகமானது பின்னர் 2014 இலிருந்து சிறந்த முறையில் இயங்குவதற்கு தேவையான பின்னணியை ஏற்படுத்திக் கொண்டதுடன் உத்தியோகத்தர்களின் சிறப்பான அர்ப்பணிப்புடன் சாதமாக அலுவலகத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்ப முடிந்நது. அதற்கமைய 2015 இல் பிரதான திணைக்களத்தில் இருந்து வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு புதிதாக தேவைப்படும் அலுமாரிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

இதற்கமைய மட்டுப் படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்டு அலுவலகத்திற்கு தேவையான வளங்களைக் கொண்டு சிறந்த சேவையை வழங்குவதற்கு உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர்

1) விநியோகிக்கப்பட்டுள்ள குத்தகை விண்ணப்பங்கள் - 880
2) பூர்த்தி செய்யப்பட்ட குத்தகைப் பத்திரங்கள் - 275
3) கணிப்பீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதங்கள் - 147
4) பிரதேச கண்காணிப்புக்கள் - 46
5) அலுவலக பரிசீலனைகள் - 71
6) விகாராதிபதிகளை நியமிக்கும் கடிதங்கள் - 05
7) பொறுப்பாளர்களை நியமிக்கும் கடிதங்கள் - 20
8) பஸ் நாயக்க நிலமேக்களை தெரிவு செய்தல் - 13
9) பொருட்களை ஒப்படைத்தல் - 17
10) நிதியை வழங்குதல் - 21
11) மரம் வெட்டுதல்கள் - 90
12) சிரமதானம் - 05
13) உண்டியல் எண்ணுதல் பணிகள் - 73
14) விவாதிக்கப்படும் வழக்குகள் - 19
15) முடிவுற்ற வழக்குகள் - 01
16) தேவைப்படும் போது திருப்பி அழைக்கும் ஒப்பந்தத்தில் விடுவிக்கப்படட் வழக்குகள் - 02

2015இல் பௌத்த விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வழிபாட்டுத் தலங்கள் 20 இற்கு பொறுப்பாளர்களை நியமித்தல் விகாராதிபதி பதவிகளை உறுதி செய்தல் மற்றம் பஸ்நாயக்க நிலமேக்களை தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் 13 என்பன நடாததப்பட்டன. பொறுப்பாளர்களிடம் சொத்துக்களை ஒப்படைத்தல் கட்டுப் பணத்தை வைப்புச் செய்தல் மற்றும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட பொறுப்பாளர்களை

தெளிவுபடுத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. பழைய வைப்புக் கணக்குகள் சிலவும் விடுவிக்கப்படட்டன.

வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான சேமிப்பு கணக்குளை சிறப்பாக பேணுவது தொடர்பாக இவ் வருடத்தில் பொறுப்பாளர்களை தெளிவுபடுத்தும் பணியானது விசேடமாக மேற் கொள்ளப்பட்டுள்ளது. உத்தேச வரவு செலவு கணிப்பீட்டு அறிக்கை மற்றும் அரையாண்டு வரவு செலவு அறிக்கையை உரிய காலத்திற்கு அனுப்ப தவறும்இ பிந்தி அனுப்பும் பொறுப்பாளர்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவதற்கு மேலதிகமாக இவ் வருடம் அதாவது 2015 ஒக்டோபர் 01 ம் திகதி நாத தேவஸ்தான கேட்போர் கூடத்தில் 70 பொறுப்பாளர்களை தெளிவுபடுத்தும் கருத்தரங்கு ஒன்று மிக வெற்றி கரமாக நடாத்தப்பட்டது. அதே போன்று 2015 இல் வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வரவு செலவுப் பதிவேடுகளை பரீட்சித்தல் உள்ளக் கணக்காய்வுப் பிரிவின் ஆலோசனைகளைப் பெற்று அவற்றின் குறைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் பொறுப்பாளர்களை ஊக்குவித்தல் தொடர்பாக நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மிகவும் பயன் தருவனவாக காணப்பட்டன

இவ்வருடத்தில் 46 வழிபாட்டுத் தலங்களும் 75 அலுவலகங்களும் பரிசீலனை செய்யப் பட்டதுடன் வமிபாட்டுத் தலங்களில் நிலவும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் குத்தகை பெற்றவர்கள் பொறுப்பாளர்கள் பிக்குமார்கள் போன்றவர்களுடன் கலந்துரையாடி நிலவும் பிரச்சனைகளுக்கு சிறந்த தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தமையையும் இங்கு குறிப்பிட வேண்டும். இதன் பொது வழிபாட்டுத் தலங்களின் மானியக் காணிகள் தொடர்பான பிரச்சனைகள் பூசகர்களின் பிரச்சனைகள் குத்தகைக் காணிகளுக்கு குத்தகைப் பணம் செலுத்தாமை போன்ற பிரச்சனைகளுக்கும் தீர்வுகள் எட்டப்பட்டன.

2015 நகர எல்லைக்கு உட்பட்டதும் அதன் வெளிப் பகுதியிலும் அமைந்துள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கான உறுதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கையானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காண்பிக்கின்றது. இதற்கமைய குத்தகை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் 880 விநியோகிக்கப் பட்டுள்ளதுடன் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்ளும் பொருட்டு 147 கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் 275 குத்தகை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக வழிபாட்டுத் தலங்களின் குத்தகை ஒப்பந்தங்கள் தொடர்பான பட்டியல் ஒன்றை தயாரித்து கணணி மயப்படுத்தி அன்றாடம் தகவல்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கையானது சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக குறித்த மாவட்டங்களில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான தகவல்களை பிரதேச செயலக மட்டத்தில் பெற்றுக் கொண்டு அவற்றை கணணி மயப்படுத்தும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



இவ் வருடத்தினுள் தலதா மாளிகை நான்கு பிரதான தேவஸ்தானங்கள் மற்றும் ஏனைய தேவஸ்தானங்களின் உண்டியல்கள் எண்ணும் பணி மேற்பார்வை செய்யும் சந்தர்ப்பங்கள் 73 இடம் பெற்றன. இதன் போது இவற்றைக் கண்காணிப்பதற்கு அதிகாரிகளை முறையாக நியமித்து இவற்றை திறம்பட செய்ய முடிந்நது. இதன் காரணமாக 2015 வழிபாட்டுத் தலங்களின் உண்டியல் வருமானம் ரூ.38808964.00 ஆக அதிகரித்து காணப்பட்டது.

2015 வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான 19 வழக்குகளில் இவ் அலுவலகம் ஈடுபட்டது. இதில் ஒன்று முற்றுப் பெற்றுள்ளது. இதில் தேவை ஏற்படின் மீண்டும் அழைக்கப்படக் கூடிய வழக்குகள் 02 ஆகும். வழக்குகளின் போது நீதிமன்றத்துக்கு சமூகம் அளித்தல்இ சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக் கொள்ளல்இ வழிபாட்டுத் தலங்களின் பொறுப்பாளர்கள்இ பிக்குமார்களுக்கு தேவையான அறிவுரைகளை உதவி சட்ட ஆலோசகரினால் வழங்கி வழக்குகளை மட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உற்பத்தித் திறன் மற்றும் அலுவலகத்தின் மேம்பாடு தொடர்பில் அனைத்து உத்தியோகத்தர்களும் இணைந்து 05 சிரமதானங்களை நடாத்தியுள்ளனர். இதன்போது அலுவலகக் கோவைகளை சிறப்பாக ஒழுங்கு செய்வதற்கு அலுவலக உத்தியோகத்தரிடமிருந்து பூரண ஒத்தழைப்பு கிடைக்கப்பெற்றது. 2014 இல் புதிய கணணி கட்டமைப்பை உருவாக்கி கோவைகளை களஞ்சியப்படுத்தும் பணிகளை முறையாகவும் திறமையாகவும் மேற் கொண்டமையால் 2015 இல் மிகவும் சிறந்த பலனைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

| தோ்டுருீலுக்கும் | வுழீபுர்டுடுத் துலும் | துடுஜவுகுள் | வுருடுத்துீனு் மோ்த்து நீதீ |
|---|---|---|---|
| 01 | தலதா மாளிகையின் கண்டி | 19 | 20356680.00 |
| 02 | கண்டி விஷ்ணு தேவஸ்தானம் | 03 | 349261.00 |
| 03 | கண்டி கண்ணகி தேவஸ்தானம் | 06 | 1486812.00 |
| 04 | கண்டி நாத தேவஸ்தானம் | 02 | 238005.00 |
| 05 | கண்டி முருகன் தேவஸ்தானம் | 11 | 2955490.00 |
| 06 | அம்பக்கை முருகன் தேவஸ்தானம் | 02 | 375971.00 |
| 07 | முதியங்கனை ரஜமஹா விஹாரை | 02 | 473250.00 |
| 08 | ரங்கிரி தம்புள்ளை ரஜமஹா விஹாரை | 02 | 1669683.00 |
| 09 | ஹங்குரன்கெத்த விஷ்ணு தேவஸ்தானம் | 01 | 247740.00 |
| 10 | கெடம்பே ராஜோபவனாராமை | 11 | 3927293.00 |
| 11 | மஹியங்கனை சமன் தேவஸ்தானம் | 03 | 2492900.00 |
| 12 | தொடன்வலை நாத தேவஸ்தானம் | 03 | 430543.00 |
| 13 | மஹியங்கனை ரஜமஹா விஹாரை | 01 | 408000.00 |
| 14 | அளுநுவர தெடிமுண்ட தேவஸ்தானம் | 05 | 2947715.00 |
| 15 | மெதகொட கண்ணகி அம்மன் தேவஸ்தானம் | 01 | 248591.00 |
| 16 | லங்காதிலக்கை விஷ்ணு தேவஸ்தானம் | 01 | 201030.00 |
| | மொத்தம் | 73 | 38,808,964.00 |

அட்டவணை 10.3-2015 ஆம் வருடத்தினுள் வழிபாட்டுத்தலங்களின் உண்டியல்களின் வருமானம்.